
# பூசம் நாள் வள்ளலாரும்
# ஐ. நா. சபை வள்ளலாரும்:

## சாகாக் கல்வியும் பழபோக யோகமும்
## வலப்பாக அருட்சக்தியும்




ஆசிரியர் : டி. ஆர். துளசிராம்

ஸ்ரீ அரவிந்த ஆசிரமம், பாண்டிச்சேரி.



வெளியீடு : அரோ - மா - இராமலிங்கர் டிரஸ்டு

AURO - MA - RAMALINGAM TRUST, MADURAI-1.

33, மஹால் 4வது தெரு, மதுரை-1.

# பூசம் நாள் வள்ளலாரும் ஐ. நா. சபை வள்ளலாரும்:

## சாகாக் கல்வியும் பழபோக யோகமும், வலப்பாக அருட்சக்தியும்

(டி. ஆர். துளசிராம். ஸ்ரீ அரவிந்த ஆசிரமம்)

வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவதாரம் செய்த சித்ரா நட்சத்திர நாளிலும், அவர் ஜட உலகில் நம்மைச் சூழ்ந்து கொண்ட பூச நட்சத்திர சித்தி நாளிலும் அவரை அன்புடன் நினைந்து அருளைப் பெறுவோம். அருள் ஒளி நிறைந்த தூல இறவா உடலைப் பெற்ற பின், தாம் வாழ்ந்த இடத்திலும், அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் புனர்பூசநாளில் 30-1-1874ல் நிரந்தரமாக வந்து குடி அமர்ந்த சமயம் பார்த்து "நான் இந்த உடலில் இருக்கிறேன். இனி எல்லா உடல்களிலும் புகுந்து கொள்வேன்" என ஏற்கனவே அறிவித்தபடி வள்ளலார் சாதி, சமய மத இன பேதமின்றி உலக மக்களின் எல்லாரது உடலின் புறச்சூழலில் முதற்படியாகப் புகுந்து கொண்டார். இது நடந்தது பூசநாளில் 31.1.1874ல். இதன் விளைவாக அவரது இறவா உடல் நம் கண்ணுக்குத் தோன்றாது மறைந்தது என்றாலும், நம் உடற்சூழலில் புகுவதைத் தொடர்ந்து செய்து வருகிறார். அவரது அருட்சக்தியால், பிறக்கும் தருணமுதல் குழந்தைகளின் உடல் சூழ சூழ்கின்றார். அஞ்ஞானத்தில் உழலும் நாம் உள்ளத்தினுள்ளிருக்கும் ஆன்மாவை அறியவில்லை. 1874 முதலாக நம் உடலைச் சூழ்ந்திருக்கும் சக்தியை (உ.சூ.ச) வள்ளலாரின் அருட்சக்தியை (Environmental Body Power—E.B.P. :- உ. சூ. ச.) யும் நாம் அறியவில்லை. இதை அறிவது எளிது. அவரவரின் போட்டோ படத்தில் தன் அஞ்ஞான உடலை 3 நிமிடம் தொட்டு, பின்பு அதன் சூழலை அல்லது படத்தின் மேல் மூலைகளை தொட்டால் அங்கு வள்ளலாரின் அருட்சக்தியை உணரலாம். மாறி மாறித் தொட்டால் அவசியம் உணரலாம்.

1874 முதலாக உலகில் வாழ்ந்து மறைந்த அல்லது இன்று நம்மிடையே வாழ்ந்துவரும் ஞானிகள், பக்தர்கள், யோகிகளின் படங்களை மேல் மூலைகளில் தொட்டால் வள்ளலாரின் U N. O. ஐ. நா. சபை. அருட்சக்தியை உணரலாம். அதற்கு முன் வாழ்ந்த மத ஸ்தாபகர்களான மத்வர், இராமானுசர், ஆதிசங்கரர்; முகமது நபி, புத்தர், இயேசு; அவதாரங்களான இராமர், கிருஷ்ணர்; யோகிகளான சூஃபி ஜலாலுதின்ரூமி, பிளேடோ; சித்தர்களான திருமூலர், சீர்தி சாய்பாபா; வேதகால ரிஷிகளான வியாசர், விசுவாமித்திரர், வசிட்டர், விசுவாமித்ரோயூபா, மற்றும் சாக்ரடீஸ், கன்ஃபூசியஸ் இவர்களின் இறைமய தூல சக்திகளை விட மேலோங்கி விளங்குவது வள்ளலாரின் அருட்சக்தி. மேற்சொன்னவர்களின்


# அருள் காந்தக் கற்கள் படம்

# SPIRITUAL - PHYSICAL MAGNETS

## OF SAINTS, SAGES, YOGIS, FOUNDERS OF RELIGIONS, AVATARS, VEDIC RISHIS ETC


**மதஸ்தாபகர்கள்—அவதாரங்கள்—யோகிகள்.**

# I



## சித்தர்கள்—வேதகாலரிஷிகள்— வள்ளல

# II



நூல இறைசக்தி கொண்ட காந்தக் கற்களை (Spiritual - Physical magnets) விட அவரது காந்தக் கல்லின் சக்தி ஒப்பற்றது. மத்வரின் சக்தியை முதற்படியாகக் கொண்டு முறையே பெயர் குறிப்பிட்ட மற்றவர்களது காந்தக் கற்களையும் அவற்றின் படிப்படியாக ஏறும் அல்லது அதிகரிக்கும் சக்தியளவு-களையும் ''அருள்காந்தக் கற்கள் படத்தில்'' காண்க. 1) MW, 2) RJ, 5) AS 7) MD, 8) BU, 8) RAM, 9) JC, 10A) **SK**, 17) JR, PL; 24) **TM**, 25) SS, 29) VV, 29) G. V., 30) M.V., 35 B) V Y, 35 B) SOC, 35B) CF இவர்களின் கற்களைவிட வள்ளலாரின் 35B) EBP, 35A) UNO, 36) SR ஆகிய மூன்று காந்தக்கற்கள் சிறப்பானவை. இவை மூன்றும் அவர் வாழ்ந்த மேட்டுக்குப்பம் சித்திவளாக மாளிகை படத்தின் சக்தியோடு ஒத்துப்போகும். '' அருள் காந்தக் கற்கள் '' படத்தில் மத்வர், ஆதிசங்கரர், ரமணர் 1 முதல் 6 வரை தூல அருட்சக்தியுள்ள சமயத் தலைவர்கள்: முகம்மது நபி புத்தர் இராமர் இயேசு கிருஷ்ணர் 7 முதல் 11 அளவு வரை தூல அருட்-சக்தியுள்ள மதத் தலைவர்கள், அவதாரங்கள்; அதற்கு மேல் 12 முதல் 28 அளவு வரை தூல அருட்சக்தியுள்ள பெரும் யோகிகள், சித்தர்கள்; அதற்கு மேல் 29 முதல் 35 அளவு வரை தூல அருட்சக்தியுள்ள வேத கால ரிஷிகள் மற்றும் அவர்களுக்கு நிகரான பிற்கால சித்தர்கள், மற்றும் கிரீஸ், மேற்கு ஆசியா சீனு, ஆகிய வெளி நாடுகளைச் சேர்ந்த சாக்ரடீஸ், சாலமன், கன்ஃபூஷியஸ் முதலானோர்; எல்லாவற்றிற்கும் மேலாக வள்ளல் பெருமானின் 35B-35A-36 அளவு தூல அருட்சக்தியும் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சக்தியும்; இதற்கு மேல் உரு, அரு, உருவரு கடந்த சச்சிதானந்த சத்சக்தி 37-45 வரையும் அதற்கு மேலும் விளங்கும். முடிவில் பரம்பொருளின் ஏ பி டி ABT உயர் சமநிலை சக்தி. ஒரே இறைவனின் உரு, அரு, உருவரு ஆகிய நிலைகளின் சக்திகளையும் அந்நிலைகளையடைந்த மேற் சொன்னவர்களின் சக்திகளையும் பரம் பொருளின் உயர் சமநிலையையும் ஆக எல்லா இறை-நிலைகளை ஒருங்கே விளக்கி இக்காந்தக் கற்களின் படம் காண்பிப்பதால், வாழ்ந்து மறைந்த அல்லது இன்று வாழுகின்ற எந்த ஒரு மகானின் தூல அருட்சக்தியை 1 முதல் 36 அளவு வரை உள்ள காந்தக் கற்களைத் தொட்டு ஒப்பிட்டு நிர்ணயம் செய்து அறியலாம். ஆகவே இப்படமே ஒரு எளிய முறையில் ஆன்ம உடல்-உயிர் சக்தியை அளக்கும் ஒரு (Ready Reference Table) அளவு கோல் அட்டவணையாகப் பயன் படுகிறது. அறிவியல் பூர்வ-மாக (Spiritual-Physical) ஆன்ம தூல அருட்சக்தியை உடனடியாக அளவிட்டு அறிவுறுத்தும் அட்டவணையாகும். அறிவியலையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் பாலமாகும்.

1)ஐக்கிய நாட்டு சபை (UNO) மற்றும் அதன் கிளைகளான யுனெஸ்கோ போன்ற உலக நிறுவனங்கள் 2) தொழில், வர்த்தகம், கலை, பண்பாடு, உணவு, உடல் நல சுகாதாரம் முதலிய பலதுறைகளில் நடக்கும் சர்வ தேச மகாநாடுகள், 3) 1893ல் சிகாகோவில் நடந்தது போன்ற சர்வமத

சமய மகாநாடுகள், 4) ஒலிம்பிக் விளையாட்டு அரங்குகள், 5) ஒரே உலகரசு ஏற்படுத்த முனையும் கழகங்கள் இவற்றின் படங்களைத் தொட்டும் பார்த்தால் அவற்றில் வள்ளலாரின் ஐ. நா. சபை அருட்சக்தி (UNO காந்தக் கல் தொட்டும் உணரலாம்) விளங்கி, மனித இனம் ஒன்றுபட்டு பல துறைகளில் முன்னேற வழி செய்து கொண்டிருக்கிறது, என அறியலாம். இதை ஐக்கிய நாட்டு பொதுச்சபையின் அருட்சக்தி என்றும் பொதுவாகக் கூறலாம். SR காந்தக்கல் வள்ளலாரின் இறைமய உடலின் அருட்சக்தியை உணர்த்தும். APJA கல் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் சக்தியையும், SAT கல் சச்சிதானந்த சக்தியையும், ABT கல் பரம் பொருளின் உயர் சமநிலை சக்தியையும் உணர்த்தும். வள்ளலாரின் படத்தில் அவரது உருவ உடல் APJA சக்தியையும், அதன் அருவச் சூழல் SAT (சத்) சக்தி-யையும், கை கால் அதே சத் சக்தியையும், கண்கள் பரம் பொருளின் பெரும் சம நிலையையும் உணர்த்தும். மற்ற மகான்களின் படங்களில் உடல் அருட் சக்தி குறைந்து காணப்பட்டு அதே அளவு சக்தி சூழலிலும் காணப்படுகிறது. ஆகவே வள்ளலாரை உரு, அரு, உருவரு, பரம் பொருள் ஆகிய எல்லா நிலை-களிலும் இறைவனுடன் பூரணமாக ஒன்றியவராகக் கொள்ள முடிகிறது.

உலகிலுள்ள எல்லா கோயில்கள், மசூதிகள், சர்சுகள், ஆலயங்கள், ஆசிரமங்கள், மடங்கள் இவற்றின் சக்திகளை விட வள்ளலாரின் EBP - UNO சு.ச.2.-ஐ. நா. சபை அருட்சக்தி மிக அதிகம். இதை ஆண்டவரின் நேர் அருட் சக்தியாகவும் கொள்ளலாம். ஆகவே உலக மதங்கள், சமயங்கள், ஆசிரமங்கள் முதலியன ஐ. நா சபையின் சீரிய தெய்வீகத் தன்மையை, அதன் ஒப்பற்ற அருட்சக்தியை, உணர்ந்து மக்களுக்கு எடுத்துச் சொல்லி வழிகாட்டி, மேற் சொன்ன எல்லா வழிபாட்டுத் தலங்களில் ஐ. நா. சபையின் அருட் சக்தி விளங்குவதற்கு ஐ. நா பொதுச் சபைப் படம் வைத்து, மேலும் ஆலய மின் விளக்குகளில் அச்சக்தி வரும்படி மெயின் சுவிட்சின் வயர்களைத் தொடும்படி அச்சபையின் சிறிய படம் வைக்கவேண்டும். சாதி மத இன பேதமின்றி எல்லோரையும் வழிபடுவதற்கு அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மனித இனம், இனப்பூசல்கள், மதத் துவேஷங்கள், சாதிச் சண்டைகள், அரசியல் குழப்பங்களின்றி ஆன்ம நேய ஒருமைப்பாடு பெற்று எல்லாத் துறைகளிலும் சிறப்புற முன்னேறும். மேலும் மதத்தலைவர்கள் சொல்லும் வரை காத்துக் கொண்டு இராமல், பொது மக்களும், நாடுகளும் தனியாகவோ கூட்டாகவோ ஐ. நா சபையை நேரடியாக ஆதரிக்க வேண்டும்.

OM என முதலில் குறித்த ஒரே வகையான சாதாரண காந்தக் கற்களை வாங்கி மேற்சொன்ன மகான்களின் படங்களின் மீது வைத்து அல்லது அவர்களை வழிபடும் ஆலயங்கள் அல்லது வாழ்ந்த வீடுகள் அல்லது ஆசிரமங்கள் இவற்றின் படங்கள் மீது வைத்து காந்தக் கல்லைத் தொட்டால் அவரவரின் இறைமய சக்தியை அது கிரகித்துத் தேக்கி வைத்துக் கொள்ளும்.

ரிக்வேத கால ரிஷி ஒருவரின் முழுப்பெயர் சொல்லி அவரை நினைந்த வண்ணமிருந்து அப்போது கையில் காந்தக்கல் வைத்துக் கொண்டால் அதில் அவரின் சக்தி புகுந்து விளங்கும். இவ்வாறு வேதகால ரிஷிகள் உட்பட முக்கிய மகான்களுக்கு அருள் காந்தக் கற்கள் தயாரித்து முறைப்படி தொட்டு ஒப்பிட்டு, அவர்களின் சக்திகளை கிரமமாக ஏறுபடியாக சீர்வரிசைப்படுத்தி அருள் காந்தக் கற்களின் படமாக இங்கு வெளியிடப்படுகிறது. ஒவ்வொரு மகானின் இரு காந்தக் கற்களை ஒரே சமயம் S கல்லின் மீது இடக்கை விரல் வைத்தும், N கல்லின் மீது வலக்கை விரல் வைத்தும் இரு நிமிடம் தொட்டால், அவரவரின் இறைசக்தி, நம் கையில் ஒரு சக்தியாக ஊர்வதாக அல்லது நம் தலையில் உள்முகமாகச் செல்லும் சக்தியாக உணரலாம். படத்தி-லுள்ள சுமார் 60 காந்தக் கற்கள் ஜதைகளை வரிசையாகத் தொட்டு, தொட்டு அருட்சக்திகளை ஒப்பிட்டுச் சரி பார்க்கலாம். மகான்களின் காந்தக் கற்களின் அருட்சக்தி வரிசைக் கிரமமாக மேலும் மேலும் அதிகரிப்பதால், தொடுபவரது தலையில் புகும் உள்முக சக்தி மேலும் மேலும் ஆழ்ந்து செல்லும். கையில் உணரும் சக்தியும் மேலும் மேலும் அதிகமாவதை உணரலாம்.

குறிப்பு : பாப்ரிமஸ்ஜித் மசூதியின் பழைய படத்தின்மீது ஒரு புதுக் காந்தக்கல் வைத்துத் தொட்டால் அக்கல் இராமரின் சக்தியை காட்டுகிறது. ஆகவே, அந்த இடம் இராமர் வாழ்ந்த அல்லது பிறந்த இடமாகக் கொள்-வதற்கு இக்காந்தக்கல் முறை அத்தாட்சியாக விளங்குகிறது. மெக்கா மசூதி அல்லது முகமது நபியின் இறைசக்தியை அக்கல் காட்டவில்லை. மேலும் புத்தர்பிரானின் சக்தியைவிட இராமபிரானின் சக்தி சற்று அதிகமாயுள்ளது.

நம் புற உடற்சூழலில் ஒரு முறை EBP-UNO சக்தியாகப் புகுந்து கொண்ட வள்ளலார் பாராமுகமாக இருந்துவிடவில்லை. நாம் நினைத்த போதெல்லாம் வந்து அருளுகிறார் என்றாலும், ஒவ்வொரு மாதத்தில் வரும் பூச நட்சத்திர நாளில் அவராகவே அல்லது அவருடைய அருட்சக்தி நம்மை நாடி, வீடு தேடி வந்து, நம் குடும்பச் சூழலிலே பூச நாள் முழுதும் தங்கி 24 மணி நேரமும் (60 நாழிகை) நம்மை அணைத்தவாறே அருள் செய்-கிறார். இதையும் நாம் அறியவில்லை. நம்முடலில் நேராகப் புகுந்து கொள்ளவும், நம் அகத்தில் உள்ளத்தில் ஊடுருவி நம்மை ஆன்ம வழியிற் செலுத்தவும் உலகளவில் எல்லாரது வீடுகளிலும் வருகை தந்து அருளுகிறார். பஞ்சாங்கம் அல்லது காலண்டரில் குறித்தபடி பூச நட்சத்திரம் உதய நாழிகை-வினாடி முதல், முடியும் நாழிகை-வினாடி வரை காலநேரம் தவறாமல் அருட்ஜோதிப் பெருமான் வருவதும், அருள் செய்து விட்டுப் போவதும் நாம் அறியவில்லை. பூச நாளில் நம் வீட்டின் பகுதிகளை அல்லது வள்ளலார் படம் வைத்துள்ள அறையை அதன் சுவற்றை இரு நிமிடம் பார்த்தபின், வெளியே தெருவையும் தெருவில் போகும் மக்களையும் மற்ற வீடுகளையும் அதன் உள்ளறைகளையும் பார்த்தால் வித்தியாசமின்றி எங்கும் ஒரே சீரான

அருட்சக்தி உயிர்த்து விளங்குவதை அறியலாம். இது போல் ஒவ்வொரு மாதமும், அவர் பிறந்த சித்திரா நட்சத்திர நாளன்றும் வந்து அருளுகிறார். மற்ற நாட்களில் தெருவிலும் மற்ற வீடுகளிலும் இவ்வாறு அருட்சக்தியை அறிய முடியாது.

இது தவிர, தினசரி நாட்களிலும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மாத்திரம் அதாவது நண்பகல் 11.45 முதல் 12.15 மணி அளவிலும், மாலை 7.30 முதல் 8.00 மணி அளவிலும், இவ்வாறே உலகளவில் நம் வீடு தேடி வந்து அருளுகிறார். இந்நேரத்தை அருட் பெருஞ்ஜோதி மந்திர ஜபம், தியானம், துதி, பூசை, அருட்பா படிப்பது, பாடுவது, அதை எழுதுவது, பூக்கள் தொடுவது, சத்காரியம் முதலியன ஏதேனும் செய்து அருட்சக்தியை நம் உள்ளத்திலும் உடலிலும் பெறலாம். தினமும் வள்ளலாரின் படம் ஒரு கையால் தொட்டு, அதே சமயம் பழம், உணவு, பானகம் தொட்டு அருட்சக்தி ஏற்றி உண்ணலாம். இதனால் நம் உடலிலும் அருட்சக்தி அமையும். ஆனால் பூசநாளில் மேற் சொல்லிய முறைகளை சிறப்பாக நாள் முழுதும் அல்லது நேரம் கிடைத்த போதெல்லாம் செய்யலாம். இரவிலும் செய்யலாம். மேலும், ஜோதி மந்திரம் ஓதி அல்லது வள்ளலாரை நினைந்து அல்லது அவர் படம் தொட்டு, மா, வாழை, பலா, ஆக பல வகை இனிப்புப் பழங்களை தனித்தனியாகத் தொட்டு பால் தேனுடன் கூட்டி பஞ்சாமுதம் செய்து மறுபடி தொட்டு அருளார முதமாக்கி பொருட்கலை சக்தி ஏற்றி (radiation) உண்ணலாம். ''தென்பால் முகம் கொண்ட தேவே'', பொற்பங்கயத்தின் புது நறவும்'' அருட்பாக்கள் பார்க்க. பூச நாள் இரவு நேரத்தில் குறிப்பாக இல்லறத்தினர் வள்ளலாரை நினைந்து உடலுறவு போக யோகப் பயனையும் அவரது அருளையும் பெறலாம். பூசநாளில் காமமும் தெய்வீக அன்பாக கருணையாக மாறியமையும். இருவர் உடலிலும் ஒரே சீரான அருட்சக்தி குடிகொள்ளும். உள்ளமும் உடலும் பொறுத்தவரை, யோகிக்கும், போகிக்கும், இல்லத்தார்க்கும் சமமாகவே வள்ளலார் அருளுகிறார். எவ்வகையிலும் அருட்சோதியால் நம் உடலைத் தெய்வீகத் தரமாக மாற்றுவதே வள்ளலாரின் லட்சியமும் அருளும் பாங்கும் கொள்கையுமாகும்.

அவரவரது பிறந்த நட்சத்திர நாளிலும் வந்து சிறப்பாக அருளுகிறார். எதிர் பாராத வேளைகளிலும் வந்து அருளுகிறார். அவரது லட்சியம் போன்ற லட்சியம் கொண்டு தவம் ஆற்றிய ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னையின் சீடர்களுக்கும் பின்னணியிலிருந்து அருளுகிறார். ஆனால் 1989 முதலாக அவர் அரவிந்த ஆசிரமத்தில் நிரந்தரமாகத் தங்கி அரவிந்தர் அன்னையுடன் ஒத்துழைத்து அருளுகிறார். இதனால் ஆசிரமத்தின் அருள் சக்தி வெகுவாக அதிகரித்து விட்டது. ஆசிரமவாசிகளின் உடலில் அருட்சக்தியும் வளர்ந்து வருகிறது. தியானமும் யோக சக்தியும் மிகுந்து இறைமய பரிணாம வாழ்வு நடை முறையில் ஏற்பட்டுள்ளது. மேலும் உலகளவில்,

அரசியலிலும் பொருளாதாரத்திலும் பெரும் மாறுதல்கள் குறிப்பாக கிழக்கு ஐரோப்பா மற்றும் சோவியத் யூனியன் நாடுகளில் வியக்கத்தக்க முறையில் ஏற்பட்டுள்ளது. மேலும், நாடுகளையும் மக்கள் சமூகங்களையும் பிரிவினைப்படுத்தும் தீவிர மதக் கோட்பாடுகளும் மதத்துவேஷங்களும், ஜாதி இன வெறிகளும், வட்டாரப்பூசல்களும் இனச்சண்டைகளும் நீங்கி விடும் என்பதில் சந்தேகமில்லை. இதற்காக ஐ. நா. சபையின் அருள்மிகு தெய் வீகத் தன்மையை ஏற்றுக் கொண்டு உலக மக்கள் எல்லாம், நாடுகள் எல்லாம் அச்சபையை ஆதரிக்க வேண்டும். துவேஷம் நீங்கி ஆன்ம நேய ஒருமைப்பாடு வளரும் என்பது நிச்சயம். இதற்கான காலம் வந்து விட்டது.

குறிப்பு : சில மாதங்களில் வரும் பூச நட்சத்திரம், 60 நாழிகையில் ஒரு பகுதி முன் தினத்திலும், மிஞ்சிய பகுதி பூச நாள் என காலண்டரில் குறிப்பிட்டிருக்கும் நாளிலும் நீடிக்கும். பூச நட்சத்திர நேரம் கணக்கிட்டு இரண்டு நாளிலும் சிறப்பாக பயன் பெறலாம். 60 விநாடி ஒரு நாழிகை. 60 நாழிகை 24 மணி. இரண்டரை நாழிகை ஒரு மணி நேரம். 24 நிமிடம் ஒரு நாழிகை 24 செகண்ட் ஒரு விநாடி.

அருட்ஜோதி ஆண்டவரின் அருளைப் பூரணமாகப் பெறுவதற்கு வள்ளலார் கூறும் சில சிறப்பு வழிகளையும் பின்பற்ற வேண்டும். புலால் நீக்கி சத்துவ உணவு கொண்டு உள்ளத்தில் கருணையும் அன்பும் பெருக வாழ வேண்டும். வேதங்கள், திருமுறைகள் எல்லாம் இறைவி, இறைவனின் இடது பாகத்தில் வாம சக்தியாக விளங்குகிறாள் எனக்கூறும். அவ்வாறே பாடி வந்த வள்ளலார், முடிவில் இறவா உடலைப் பெற்று பூரணசித்தி-யடைந்தபின், இறைவனுக்கு வலப்பாகத்தில் அருட்சக்தி விளங்குவதாகத் தம் அனுபவத்தைக் கூறுகிறார். சிற்சக்தி இறைவியை ''சோதிக் கொடியே ஆனந்த சொரூபக் கொடியே சோதி உருப் பாதிக் கொடியே, சோதி வலப் பாகக் கொடியே என்றும், இறைவர் வலப்பாகக் கொடியே, சிவகாமக் கொடியே, போகக் கொடியே'' என்றும் பாடியுள்ளார். அருட்-சோதியை உடலிலும் நாடிய ஒரு தலைவியின் கூற்றாக வைத்து ''மன்னு திருச்சபை நடுவே மணவாளருடனே வழக்காடி வலது பெற்றேன்'' எனக் கூறுவதாலும், சோதி அகவலில் ''நலங் கொளப் புரிந்திடு ஞான யாகத்து இடை வலஞ் சுழித்து எழுந்து வளர்ந்த மெய்க் கனலே''—என்ப்பாடுவதாலும் இறைவனின் வலப்பாகத்தில் இறைவி அருட்சக்தி விளங்குவதைக் கூறி உபதேசத்திலும் இதை உறுதிப்படுத்துகிறார். வள்ளலார் இறைவனுடனும், அருட்சக்தி வடிவுடனும் ஒன்றாகி விட்டதால், தானும் இறைவனின் வலத்திலே அவரது வசத்திலே இருப்பதாக விளக்குகிறார். ''தன்னையும் தன் அருட் சக்தி வடிவையும் என்னையும் ஒன்றென இயற்றிய ''இறைவனை'' வள்ளலார் ஜோதி அகவலில் பாடுகிறார். ஆகவே அருட்சக்தி அம்மையின் நிலையிலிருந்தும் வள்ளலார் நேரடியாக நமக்கு அருளுகிறார்.

மேலும், மக்களை தத்தம் உடலின் வலப்பாகத்தில் எழுந்தருளும் அருட் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ளும்படி கீர்த்தனையில் ''வலது புஜம் ஆட நம்பால் வந்தது அருள் வாழ்வு, மற்று நமைச் சூழ்ந்தவர்க்கும் வந்தது நல்வாழ்வு'' எனக் கூறுகிறார். இதை நடைமுறையாகப் பயில, பழம் ஒன்றை வலக்கையில் வைத்துக் கொண்டு வ ள் ள லா ரை நினைந்து அக்கையை மெல்லென வீசி நடந்தால், அ ப் ப ழ த் தி ல் அருட்சக்தி மிகுந்து தங்கும். தியானமும் கூடும், நம்முடலிலும், அருட்சக்தியின் உயிர்ப்பும், நிறை இன்ப சுக உணர்வும் பெறலாம்,

திருமூலரும் வலப்பாக அருட்சக்தி வந்து சிறப்பாக கணவன் மனைவி இருவருக்கும் அருளுவதற்கு, உ பா ய ம் கூறுகிறார். தலைவனிடம் வலம் ஆயிடில் தையல், தலைவனிடம் வலம் தன்வழி அஞ்சில், தலைவனிடம் வலம் தன் வழி நூறே'' மந் 773. தலைவனுக்கு வலப்பக்கமாக தலைவி இருந்து போக யோக உறவு வழங்கினால், பஞ்ச பூத உடலும் புலன்களும் அஞ்ஞானம் நீங்கி இறைவனிடம் வலிமை, வல்லமை மிகுந்த ஞானம் பெற வழியாகும் என்பது கருத்து, ஆண் பெண் ஒவ்வொருவரின் உடலில், உ ட லு று ப் பி ல் பாலுறுப்பில் வலப்பக்கம் ஞானமாகவும், இடது பக்கம் அஞ்ஞானமாகவும் கருதப்படுகிறது. இயல்பாகவோ, காம எழுச்சியின் காரணமாகவோ இந்திரியம் இடது பக்கம் திரும்புகிறது. இது அஞ்ஞானம். அதை வ ல ப் பு ற ம ா க க் கொண்டு வருவதற்கு திருமூலர் கூறிய உபாயம் ஞானம் பெருகும் போகமாக அமைகிறது. தனிப்பட்ட முறையிலும் இது செய்து பார்க்கலாம். அருட்சக்தி ஏற்றிய ஒரு மாம்பழம் அல்லது வா ழை ப் ப ழ ம் வலக்கையில் பிடித்தபடி வள்ளலாரை நினைத்தவாறே மெத்தென போகம் செய்தால் பாலுறுப்பு சற்று வலப்பக்கமாக வளைந்து வந்து அதில் (அல்லது சற்று வலப்பக்கப் பாலுறுப்பில்) ஞானத் தெளிவுடன் போக இன்பம் உறைத்து மேலிட்டு, உள்முக தியானம் இயல்பாக அமையும். ஐம்புலன்கள் மலர்ந்த நிலையில் அதாவது போகம் முதிர முதிர, தியானமும் கூடி உள் முகமாக ஆழ்ந்து ஆழ்ந்து செல்லும். பாலுறுப்பில் ஒளி பெ ரு கு ம் . இது ஞான போகமாகிறது. வள்ளலாரை நினைந்தவாறு அதிக சூடு ஏருமலும் விந்து வெ ளி ப் ப டா த வாறும், சிறிது நேரம் பழ போகம் மெத்தென இடை விட்டு விட்டுச் செய்ய வேண்டும். நடந்தவாறு செய்-தால் விந்து தடைப்படுத்த உதவும். விந்துவரக் கூடுமென உணர்ந்தால் போகம் நிறுத்தி தியானம் மாத்திரம் செய்வது நலம். ஆனல் அஞ்ஞான போகத்தில் தியானம் சுலபமாகக் கூடிவராது. இடது, நடுவு, வலது இவற்றில் வலப்பக்க போகம் முதற்படியாக சிறப்பாக அனுபவித்த பின், நடு அல்லது இடது பக்க போகமும் கொள்ளலாம். ''நடநலம் வளர் தரும் ஒளியே... இடம் வலம் வளர் தரும் இசைவே'' உடலும் சீராக இசைவான நலமுடன் அமையும்.

வள்ளலார் இவ்வாறான பழபோகத்தை ''வலது புஜம் ஆட நம்பால் வந்தது அருள்வாழ்வு'' என இரகசியமாகக் கூறுகிறார் என்ருலும், வீட்டில் வலக்கை மெல்ல வீசி நடந்த படியே செய்யும் தியானத்திற்கும் இக்கூற்று

பொருந்தும். தியானம் உள்முகமாக வலுவடையும். பாலுறுப்புக்கு பழரசம் பூசியும் நடக்கலாம். அருள் தியானமமையும். மேலும் சாகாத கல்வியிலே; சாகாத கல்வியே கல்வி; சாகாத கல்வியிலே தலைகாட்டி; சாகாத தலை இது; சாகாத வரம் எனக்கே தந்த; என வரும் பாட்டுகளில் ''மா காதலால்'' பேரன்புடன் மாம்பழ போகம் செய்வதை மறைவாகக் குறிப்பிடுகிறார். சிவமே பொருளெனக் காண்க. சிவமே பொருளெனக் கருதுக... எனச்சொல்லி மாம்பழமே சிவப்பொருளாக சச்சிதானந்தப் பொருளாக கைப்பொருளாகக் கொண்டு தனிப்பட்ட முறையில் ''ஏக சிவபோக அநுபோகம்'' செய்வதை நமக்கு அருளுகிறார். இப்பாட்டுகளில் வரும் புதிரான சொற்கள் சாகாத்தலை,வேகாதகால்,போகாதபுனல்,இவை முறையே இறைமய ஆகாயம், காற்று, அக்னி (வெம்மை கொண்ட புனல்) என உபதேசத்தில் தெரிவித்து, இவற்றை ஒருசேர அடையும் வழியாக மாம்பழம் முதலான பழபோகத்தை சொல்லாமல் சொல்லி விடுகிறார். தியான நேரத்தில் தொட்ட அல்லது அவரது படம் தொட்டு அருட்சக்தி ஏற்றிய மாம்பழம் அல்லது வாழைப்பழம் போகம் செய்வதால் அதன் பிசுபிசுப்பான இனிப்பு ரசம் பாலுறுப்புள் சென்று இரத்தத்தில் கலந்து மேலேறி தலைக்கும் சென்றடைகிறது. இதனால் போகத்தின் போது சாதாரணமாக வெளிவரக்கூடிய பிசுபிசுப்பான வெம்மை நீர் வருவது நின்றுவிடும். இதை போகாப் புனலாக சித்தரிக்கிறார். இதையே ''சிந்தா நலமும் பலமும் பெற்று தேக்குகின்றேன்'' என்றும் கூறுவார். (உலப்பில் இன்பம் பா 2ம் 3ம்). பழத்தின் தலைப்பாகத்தில் (காம்புக்கு எதிர்புறம்) பொருட்கலை சக்தி (Radiation) விளங்கி அலை வீசுவதை அதன் சமீபமாக விரல் நுனிகளைக் கொணர்ந்து நுட்பமாக உணரலாம். பழபோகத்தால் நம் தலைக்கு ஏறும் பொருட்கலை சக்தியை (radiation) சாகாத கலையான ஆகாயமாக, சாகாத் தலையாகக் குறிப்பிடுகிறார். மேலும், உடல் வெம்மையுறாது குளுமை கொள்வதால், வெம்மை நீங்கிய காற்றாக வேகாத காலாகக் குறிப்பிடுகிறார். ஆண் பெண் காம உடலுறவில் ஏற்படும் விளைவுகளுக்கு முற்றிலும் மாறாக இப்பழபோகம் அமைகிறது. இப்பயிற்சியே சாகாக் கல்வியாகும், இறவா அருளுடலைத் தரும் என பாமரர்களும் ஒருவாறு அறியும்படி ஆனால் இரகசியமாகக் கூறியுள்ளரர். ''இடையாகிய சக்தி என்னும் அருளாகிய ஆன்ம இயற்கையால் தேகத்தை நீடித்துக் கொள்வது'' என உபதேசத்தில் ஒருவாறு பொதுவாக, யமனை வெல்லும் உபாயமாக பாலுறுப்பினுல் பழபோகம் செய்வதைக் குறிப்பிடுகிருர்.

திருமூலரும் இப்பழபோக யோகத்தை வெளிப்படையாக ''செறியும் கிரியை சிவதத்துவமாம் (மா ஆம்) சுகயோகப் பேரருள் கல்வி'' என்றும், தோட்டத்து மாம்பழம் தூங்கலுமாமே'' என்றும், ''வானகம் ஊடு அறுத்தான்., கானக வாழைக்கனி நுகர்வு'' என்றும், பழுத்தன ஐந்தும், பழமறையுள்ளே'' என்றும்-(மந் 2189, 624, 2997, 2721) பாடினார். மேலும், எண் சித்திகளும் தரும் என ''மந்தரம் (பழம், பழவிடை) ஏறி... இட்ட மது உள்ளே இறுக்கல்... கந்தாய்க் குழியிற்

கசடற வல்லார்க்கு தந்தின்றி (சந்ததியின்றி, சந்ததிப் பெருக்கமின்றி) நற்காமிய லோகம் (சிதம்பர உலகு) சார்வாகும் எனக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கும் பழபோகம் உதவும் என்றும், கையில் (பாலுறுப்பில்) அணிந்த அணி மா (மாம்பழம்... அணி மாதி (அணிமா, லகுமா, கரிமா, மகிமா முதலிய சித்தி) தரும் என்றும் (மந்-670-676) தெரிவிக்கிறார். பிராணயாமம் மூச்சுப் பயிற்சி செய்யாமலே பழபோகத்தால் (மந் 539 ல் ''மாகமை'' மா கம ஐ (மா காதல் பழரச வானமுதம் பெற்று) அணிமாதி சித்தியடையும் முறையாகும். மேலும், திருமூலர் மாம்பழ போகத்தை ''மா தனம்'', ''மா போதம்'' எனக்குறிப்பிட்டு, ''மா'' எனும் சொல்லை சில மந்திரங்களில் முதலிலும், நடுவிலும் இறுதியிலும் வைத்தும், உதாரணமாக மாமே, மா ஆமே என இறுதியில் வைத்தும் மாம்பழ போகத்தை இரகசியமாகக் குறிப்பிடுகிறார். மந் 672-3, 635, 675, 712, 720, 1494, 1491, 578, 801, 1643, 539, 449 1040-1, 716-7). மாணிக்க வாசகரும் இறைவனைச் சிக்கெனப் பிடிக்கும் முறை என பழப்பொருள் போகத்தை யோகத்தின பொலிவு எனச் சிறப்பித்துச் கூறுவார். (பிடித்த பத்து பா 4, 7) வாழைப்பழத்தின் மனம் கனிவித்து எதிர்வது எப்போது, பயில்வி'' என (நீத்தல் விண்ணப்பம் பா-34) முறையிடுகிறார்.

வள்ளலார் கட்டு மாம்பழமே கதலி வான் பழமே'' என பழபோக யோகத்தை மறைவாகக் குறிப்பிடுகிறார். (ஜோதி அகவல் 666-7, 670, 680, 703). நல்ல மருந்து பா 13ல் வாழைப்பழமும் 23ல் செந்தூர மாம்பழமும். 19ல் பழபோகம் மருந்தாகவும், ஞான மா மருந்தாகவும் சொல்வதால் இன்று நம்மைத் தாக்கி வரும் புதுப்புது நோய்களையும் குணப்படுத்தக் கூடும். பழபோகத்தை அருட்பிரகாசமாலே, அதிசயமாலே, அபராத மன்னிப்பு மாலே, பேராநந்தப், பெருநிலே அநு போக நிலேயம் ஆகிய அருட்டா பதிகங்களிலும் தனித்திருமாலே தனிப்பாடல்களில் ஆங்காங்கும் மறைமுகமாக சாகாத கல்விப்பயிற்சியாகச் சொல்லுகிறார். நடைமுறையில் வாழைப்பழத்தை நீளத்தில் நடுவாக இரு பாதியாக அறுத்து, மறுபடியும் தலைகீழாக மாற்றிச் சேர்த்தால் இயல்பாகவே அருட்சக்தி பழம் முழுவதிலும் குடி கொள்ளும். இது அருளான அர்த்த நாரீசுவரர் தத்துவத்தை விளக்கும். அதன் சக்தி தொட்டுணர்ந்து உண்ணலாம். அல்லது அமுத பழமாக போகம் செய்து இன்பமும் ஞானமும் பெறலாம். இதனால் பழத்திலும் பாலுறுப்பிலும் இடம் கொண்ட அருட்சக்தி, போக யோகப் பயனைத் தீவிரப்படுத்தி சகஸ்ரார தலை உச்சி ஏறவும், வானகம் ஊடறுத்து சிதம்பர வெளிக்கு ஏறிச் செல்லவும் அருளுகிறார். பூமியில் பழுக்கும் பழம் மறைவாக சச்சிதானந்த சத்துக் கொண்டுள்ளது. அதன் போகத்தால் பழரசம் உள்முகமாக தலைக்கு ஏறி, யோக உணர்வு தலேக்கு மேலும் ஏறி சகஸ்ராரத்தின் ஆன்ம இறைமய சச்சிதானந்த நிலையடைய உதவுகிறது. ஆகவே வள்ளலார் பாலும் தேனும் கலந்த அமுதப் பொருளை அல்லது

பழச்சத்து பொருளை போகப் பொருளாக, கைப் பொருளாகப் பயன்படுத்தி ''உயிர்கள் எல்லாம் (சத்மார்க்கம் எனும்) சன்மார்க்கம் காதலித்தே திருப்பொதுவை களித்து ஏத்தல் வேண்டும்'' என்றும் ''பொருள் திறம் சேர் சன் மார்க்க நிலையில் அருட்திறம் (தியானம்) சேர்த்து எண்ணியவாறு ஆடி'' மரணமிலாப் பெருவாழ்வு அடைந்திட வேண்டும் என முடிவாக இல்லறத்தார்க்கும் பச்சைக்கொடி காட்டி அருளுகிறார். ''தனித் துணையாய்'' என வரும் ''பழப் போகம்'' பாட்டில் ஆண்டவரே கனித் துணையாய் அமைந்து மனித்த உடம்பு அழியாதவாறே கனியின் இன்னமுது அளித்து ... எல்லாஞ் செய் வல்ல சித்திதனையும், அழியா உடலையும் தந்து தன்னுள் புகுந்ததாக வள்ளலார் கூறியிருப்பது தனிப்பட்ட பழபோகக் கருத்துகளுக்கு ஆதாரமாகும்.

வள்ளலாரின் சுத்த சன்மார்க்க உபதேசம் சுருக்கமாகச் சொன்னால் :- அடிப்படை நான்கு ஒழுக்கங்களான (அ) உடல்-இந்திரிய (ஆ) கரண (இ) ஜீவ (ஈ) ஆன்ம ஒழுக்கங்களைப் பின்பற்றி நான்கு நிலைகளை (புருஷார்த்தம்) அடைவதாகும். நான்கு ஒழுக்கங்களை பின்பற்றி அருட்பெருஞ்ஜோதி மந்திரம் நாவாலும் மனதாலும் ஓதினால் உள்ளுடல் பொன் மயமாகும். அதை அகக்காட்சியில் பார்க்கலாம் 1) இதுவே முதல் நிலையான ஏமசித்தியாகும். 2) தொடர்ந்து, உணவு மற்றும் பஞ்சாமுத பழ அமுத வகைகளை ஆண்டவரை நினைந்து வள்ளலாரின் படம் தொட்டு அருட்சக்தி ஏற்றி உண்பது, உடலிலும் அருட்ஜோதி வரவேண்டுமென விரும்பி சமயம் வாய்க்கும் போது பழ போக யோகம் தியானத்துடன் செய்வது ஆகியவை சாகாக் கல்வி பயிலும் இரண்டாவது நிலையாகும். 3) தொடர்ந்து மந்திர ஜபம் தியானம் முதலியவற்றைச் செய்து ஆன்ம அனுபவம் பெற்று பின்பு கடவுள் நிலையறிந்து இறைமய மாதல் (ஈசத்துவம்) 4) முடிவில் அண்ட பிண்ட தத்துவங்களை தன் வ்சமாக்கி (தத்துவ நிக்கிரகமும் வசப்படுத்துதலும்; வ்சித்துவம்) ஒளிமய சாகா உடல் பெற்று ஐந்தொழிலைச் செய்வது, ஒரே சமயத்தில் இறைவனை நம் ஆன்மாவில் (அகம்), உள்ளத்தின் உணர்ச்சியில், அறிவில், உடலில் அதன் ஒவ்வொரு உயிரணுவில் உச்சி முதல் உள்ளங்கால் வரை நிறைந்தும் புறச் சூழலிலும் உணர்ந்து இன்புறுதலாகும்.

அருளும் பொருளும் கூடி, அருட் பெருஞ் ஜோதியும் பொருட் பெருஞ்சோதியும் அருளால் இணைந்தால் தான் சாகா நிலை வரும். சித்சக்தியின் தியான யோகமும், சத் சக்தியின் பொருள் போகமும் சேர்ந்தால் தான் சாகா ஞான உடல் சித்திக்கும். வள்ளலார் கூறும் புது ஏற்பாட்டின்படி இறைவனின் வலப்பாக அருட்சக்தியை பயன் படுத்தி நம் அக வாழ்விலும் அனக புற வாழ்விலும் பழ போகத்தால் (அக வடிவு அனக வடிவாகி) ஞானமும் ஞான அருளுடலும் பெறுவோமாக.